

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

ப.பிரதாப்



“

காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை

”

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 819379638-1
9788193796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்
(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்
ப. பிரதாப்

உரிமை
ஆசிரியருக்கே

முதற்பதிப்பு
அக்டோபர், 2019

வெளியீடு
தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு
பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1
9788193796382

# 63 சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழல்கள்

ம.காயத்ரி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, என்.ஜி.எம்.கல்லூரி,
பொள்ளாச்சி.

தமிழ் மக்களின் சிந்தனையை ஆதாரமாகக் கொண்டு காலத்தைப் பிரித்தால், சங்க காலம் என வழங்கும் காலப்பிரிவை இயற்கை நெறிக்காலம் என்று கூறலாம். இயற்கை நெறிக்காலம் என்று கூறும் போது தமிழ் மக்களுடைய வாழ்க்கை தமிழ்நாட்டுச் சூழலுக்கு ஏற்ப அமைந்தது, அதுவே பிறநாட்டினர் செல்வாக்குத் தமிழ்மக்களிடம் சிறப்பிடம் பெறவில்லை.

### சங்க காலத்தில் நிலப்பாகுபாடுகள்

சங்ககாலத் தமிழ்மக்கள் வாழ்க்கை, தமிழ்நாட்டிற் காணப்பட்ட ஐவகை நிலப்பாகுபாட்டிற்கு ஏற்ப அமைந்திருந்தது. தமிழ்நாட்டில் மலையும் மலை சார்ந்த நிலமுமான குறிஞ்சி, காடும் காடு சார்ந்த நிலமுமான முல்லை, கடலும் கடல் சார்ந்த நிலமுமான நெய்தல், வயலும் வயல் சார்ந்த நிலமுமான மருதம், வறண்ட பகுதியான பாலை என ஐவகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

தமிழ்நாட்டில் சோழநாடு, பாண்டிநாடு, சேரநாடு என்ற மூன்று பிரிவினில் சோழநாடு வளம் மிகுந்ததாக அக்காலத்தில் காணப்பட்டது. காவிரியின் நீர்ப்பாசனமே அந்த நாட்டின் வளத்திற்குக் காரணம். சோழநாட்டில் பெரும்பாலும் மருத நிலமாக அமைந்திருந்தது. சேரநாடு பேரியாற்றினால் வளம் பெற்றது. பேரியாற்றின் பகுதியில் மருத நிலம் இருந்தாலும் பெரும்பகுதி குறிஞ்சி நிலமாகவே உள்ளது. வைகை, பொருநை என்னும் ஆறுகள் பாண்டி நாட்டில் பாய்ந்தாலும் முல்லை நிலமே அங்கு காணப்பட்டது. தமிழ்நாட்டின் கீழ்த்திசை, தென்றிசை, மேற்றிசை ஆகியவற்றில் கடல் சூழப்பட்டதால் நெய்தல் நிலம் தமிழ்நாட்டில்

அதிக அளவு இருந்தன. சங்க இலக்கியங்களிலிருந்த தமிழ்நாட்டையும் இன்றைய தமிழ்நாட்டையும் ஒப்பிட்டால் தமிழ்நாட்டின் வறட்சி காலப்போக்கில் அதிகரித்து வந்திருக்கின்றது என்றேக் கூறலாம்.

குறிஞ்சி நிலமே மக்கள் ஆதியில் வாழ்ந்த இடமென்றும், குறிஞ்சியிலிருந்து முல்லைக்கு மக்கள் குடிபெயர்ந்த காரணத்தால் பண்பாட்டு வளர்ச்சியில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டதென்றும் கூறலாம்.

## மக்களின் வாழ்க்கை நிலை

"சங்ககால மக்கட் பாகுபாடும் வாழ்க்கையும் ஒழுக்கமும் நில இயற்கைக்கு ஏற்பவே அமைந்திருந்தன" என்று சு.வித்தியானந்தன், தமிழர் சால்பு, சமூக அமைப்பு என்ற நூலில் குறிக்கின்றன.

"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப"
(தொல்.பொருள். நூ.20)

என்ற தொல்காப்பய நூற்பாவிற்கு ஏற்ப சங்க காலத்தில் ஒவ்வொரு நிலத்திற்கும் அந்நிலம் சார்ந்த கருப்பொருட்கள் அமைந்தன. ஆநிரை மேய்த்தலைத் தொழிலாகக் கொண்ட முல்லை நிலமக்கள் ஆயர் எனவும் இடையர் எனவும் கோவலர் எனவும் கூறப்பட்டனர். முல்லைநில மக்கள் வாழ்ந்த இடங்களில் மான்களும், முயல்களும் இருந்தன. அவற்றைக் கொன்று அவர் உண்டனர். பால், தாய் முதலானப் பண்டமாற்றினாற் பெறப்படும் தானியவகைகளும் அவர்களுக்கு உணவாக இருந்தன. அவர் குடியிருப்பு சேரிப்பகுதியாகும். குறிஞ்சி நில மக்கள் குறவர் ஆவர். அவர் வாழ்ந்த இடங்களில் யானையும், புலியும், கரடியும் இருந்தன. தினையே குறிஞ்சி நிலத்தில் விளைந்த முக்கிய தானியமாகும். இந்நில ஆடவர் வேட்டைக்குச் சென்றபோது பெண்கள் உயர்ந்த பரண்களில் ஏறியிருந்து காட்டு மிருகங்களிடமிருந்து தினைப்புனத்தைக் காத்தனர். இவர்

குடியிருப்பு சிறுகுடி எனப்பட்டது. மருதநில மக்கள் உழவர், உழத்தியர், கடையர், கடைசியர் முதலியோர் ஆவர். மருதநிலம் பண்ணையெனப் பல இடங்களிற் குறிக்கப்படும். நெல் வயலைக் குறிக்கும் களம் என்ற சொல்லிலிருந்து உழவரைக் குறிக்கும் களமர் என்ற சொல் தோன்றியது. மருதநிலத்துக் குடியிருப்பு ஊர் எனப்பட்டது. வேளாண்மையே இந்நில மக்களுடைய முக்கியமான தொழிலாக இருந்தது. நெல்லும் கரும்பும் இங்கேயே முக்கிய தானியமாகும்.

நெய்தல் நில மக்கள் மீன் பிடித்தனர். பட்டினம், பாக்கம் என்பன இவர் குடியிருப்புக்கு வழங்கிய பெயர்கள். நெய்தல் நிலத்து மக்களை நுளையர், பரதவர், வலைஞர் எனப் பலவாறு அழைத்தனாசு. அவாசுகளுக்கு மீன், கள், கூழ் என்பன உணவாக இருந்தன. பாலை நிலத்து மக்கள் வேட்டையாடுதலையும் வழிப்பறி செய்தலையும் தொழிலாகக் கொண்டனர். எயினர், மறவர், வேடர் என்பன இவருக்கு வழங்கிய பெயர்கள். இவர் பன்றியின் இறைச்சி, ஆமாவின் இறைச்சி, கள் என்பனவற்றை உணவாகக் கொண்டனர். இவர் வசித்த குடிசை குறும்பு எனப் பெயர் பெற்றது.

சங்க காலங்களில் இலக்கியம் மக்கள் ஒழுக்கத்தையே பொருளாகக் கொண்டது. மக்கள் எல்லோருக்கும் இயல்பாக அமைந்த காதலுணர்ச்சியும் வீர உணர்ச்சியுமே அக்கால இலக்கியங்களிற் சிறப்பக்கப்பட்டது. அக்கால இலக்கியப் பொருள் மரபு முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என வகுக்கப்பட்டது. உரிப்பொருளாகிய ஒழுக்கம் நிகழுமற்கு முதற்பொருள் நிலைக்களமாகவும் கருப்பொருள் அதற்கு உதவுமாறும் செய்யுட்கள் செய்யப்பட்டன.

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலை திணைக்ரிப் பொருளே"

(தொல்.பொருள். நூ.16)

என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கு ஐவகை நிலத்திற்குரிய

உரிப்பொருள் குறிக்கப்படுகின்றன. ஒத்த காமமாகிய உயர்ந்த காதலுணர்ச்சி புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என ஐந்தாக வகுக்கப்பட்டு அவ்வந்நில இயற்கைக்கு ஏற்ப குறிஞ்சி, பாலை முல்லை, நெய்தல், மருதம் என்பவற்றிற்கு முறையே சிறப்பாகக் கொள்ளப்பட்டது. முதற்பொருள், கருப்பொருள் என்பன தனித்தனியே வகுக்கப்பட்டன.

ஐவகை நிலங்களின் பெயர் அவ்வந்நிலத்துக்குச் சிறந்த காதலொழுக்கங்களுக்கும் பெயர்கள் ஆய்ன. ஒவ்வொரு நிலத்திற்கும் சிறப்பாக உரிய தாவரத்தின் பெயர், அவ்வந்நிலத்துக்குப் பெயராகி, அவ்வந் நிலத்துச் சிறந்த காதலொழுக்கத்துக்கும் பெயர்கள் ஆயின. அக்கால வாழ்க்கையில் இயற்கை பெற்ற முக்கியத்துவத்துக்கு ஒரு சான்று. தமிழ்நாட்டு மக்கள் தத்தம் நிலத்திற்குச் சிறப்பாக உரிய பூக்களையும் தழையையும் அணிந்தனர். போருக்குச் செல்லும் போது கூடப் பூச்சூடிச் சென்றனர். அக்காலப் போர் ஒழுக்கமும் வெட்சி, வாகை, வஞ்சி, உழிஞை, தும்பை என ஐந்தாக வகுக்கப்பட்டது. போர் ஒழுக்கத்தின் பெயரும் அவ்வந்நில மக்கள் சூடிச் சென்ற பூவின் பெயராவே அமைந்தது. இயற்கையே ஒட்டிய உவமைகள் அக்காலத்தில் பெருந்தொகையாக வழங்கின. இவைகள் எல்லாம் அக்காலத்து மக்கள் இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்தமையைக் குறிக்கின்றன.

இயற்கையோடியைந்த அக்கால வாழ்வில், பிறநாட்டார் செல்வாக்கு எந்த அளவுக்கு இடம் பெற்றிருக்காலம் என்பது ஆராயவேண்டியவையாகும். இந்தியத் தீபகற்பத்தின் தென்கோடியில் அமைந்துள்ள தமிழகத்துக்கு வடக்கில் வேங்கடமும் தெற்கில் குமரியும், கிழக்கிலும் மேற்கிலும் கடல்களும் எல்லைகளாக இருந்தன. இன்றைய தமிழ்நாடும், கேரளமென்ற மாநிலமும் மைசூர், ஆந்திரப் பிரதேசம் என்ற மாநிலங்களின் தெற்குப் பகுதிகள் சிலவும், அன்றைய தமிழகத்துள் அடங்கியிருந்தன. கி.மு.மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த அசோகப் பேரரசன் காலத்திலேயே தமிழகம் சேர, சோழ, பாண்டிய நாடுகளாகப் பரிந்து விட்டதற்குச் சான்றுகள் உள்ளன.

தமிழ்நாட்டின் ஒரேநிலை எல்லையாக இருந்த வடக்குப் பகுதியிலும் தமிழருடைய திராவிடச் சகோதரரான தெலுங்கரும், கருநாடகருமே வாழ்ந்தனர். தெலுங்கரும் கருநாடகரும் வாழ்ந்த நாடுகளுக்கு வடக்கிலேயே ஆரியர் நாடு இருந்ததால் ஆரியருடைய தாக்கம் தமிழ்நாட்டில் அதிகமாக இல்லை.

அகத்தியரைப் பற்றி வழங்கும் பல்வேறு புராண இதிகாசக் கதைகள், ஆரியர் தென்னிந்தியாவிற்கு வந்ததையும் தமிழ்நாட்டிற் குடிபுகுந்ததையும் தென்னிந்திய வரலாற்றுப் பேரறிஞர் நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிடுகிறார்.

பிற்காலத்தில் முகமதியர் மதுரையை இடமாகக் கொண்டு தமிழ்நாட்டை ஆண்டது போல, ஆரியர் சங்க காலத்திற்கு முன்பே தமிழகத்திற் குடிபுகுந்து மதுரையை மத்திய இடமாகக் கொண்டு, தமிழ்நாடு முழுவதும் தம் செல்வாக்கைப் பரப்பியிருக்கலாம் என்று அறியப்படுகிறது. மதுரையென்ற பெயரே வடநாட்டு ஊர்ப்பெயராக இருத்தல் குறிப்பிடத்தக்கது.

பண்டைக் காலத்தில் மதுரைப் பகுதியிலே தமிழ் வளர்ச்சியுறத் தொடங்கியமைக்கு வட இந்திய அறிஞர் தொடர்பும் ஒரு காரணமாக இருக்கலாம்.

தமிழ்நாட்டில் சங்க காலம் நிலவியபோது வடஇந்தியாவிற் சமய நெறிக்காலமே நிலவியது. தமிழ் இலக்கியத்தில் சங்க காலம் போற்றப்பட்டபோது, வடஇந்திய இலக்கியத்திற் சமயமே முக்கியத்துவம் பெற்றிருந்தது. இலக்கியம் வாழ்க்கையைக் குறிப்படும் போது அக்கால மக்களிடம் சமயம் முக்கிய இடம் பெறவில்லை. அதன் பின்னரே சங்க காலத்தமிழகத்தில் ஐவகை நிலங்களுக்கும் வெவ்வேறு தெய்வங்களும் வெவ்வேறு வழிபாட்டு முறைகளும் வழக்கிலிருந்தன.

இவ்வாறாக சங்ககால மக்களிடையே வேறுபாடுகள் எதுவும் இல்லாமல் வாழ்ந்தனர் என்றும் அவர்களுக்குப் பின்னரே வேறுபாடுகள் தோன்றியன என்றும் அறியமுடிகின்றது.

•••